இரா. மோகன் கி. இராஜா

'ஜெயன்' ரமண கங்கா

சின்னச் சின்ன இழை

சின்னச் சின்ன இழை

ரமண கங்கா
'ஜெயன்'
கி. இராசா
இரா. மோகன்

ஏரக வெளியீடு

1980

முதற்பதிப்பு : ஏப்ரல் 1980

© உரிமை பதிவு

விலை ரூ. 6

ஏரக வெளியீடு

263-C, சதாசிவ நகர்

மதுரை–625 020.

அச்சிட்டோர் : கோனார் பிரிண்டர்ஸ், மதுரை–1.

தொலைபேசி : 25154

பதிப்புரை

இச் 'சின்னச் சின்ன இழை'கள் ஏரக வெளியீடாக வருகின்றன. புதுக்கவிதைகளின் சுவை மிகுந்த தொகுப்பு இது.

பல கவிதைகள் இழை பின்னப்பட்ட சரிகைத் துணி போல் மின்னுகின்றன. ஊடுருவி நிற்கும் சமுதாய உணர்வு நம் மனவுணர்ச்சியைத் தூண்டுகிறது.

டாக்டர் இரா. மோகன், கி. இராசா, ஜெயன், ரமண கங்கா ஆகிய நால்வரும் தம் கவித் திறமையை இதில் வடித்தெடுத்துத் தந்துள்ளனர்.

பக்திக்கு 'நால்வர்' காரணம்; இப் புத்தம் புதிய பதிப்பிற்கும் 'நால்வ'ரே காரணம். நான்கு என்ற எண்ணுக்குத் தமிழ் இலக்கியத்தில் மிக்க செல்வாக்குண்டு. நால்வர், நாற்பது, நான்மணிமாலை, நானூறு, நாலாயிரம் என்றிப்படி விரியுமல்லவா? இந்த நான்கு கவிஞர்களின் திறமை எத் தகையது? அவர்கள் படைத்த கவிதைகள் சுவைமலிந்தவை, புத்துணர்ச்சி மிக்கவை, சமுதாய அங்கதமாய் ஈட்டிபோற் பாய்பவை, பாலொடு தேன் கலந்த இனிப்புடையவை, மின்னல் போல் அறிவு வெளிச்சம் தருபவை, மழை மேகம் போல் இடி இடிப்பவை, 'மேற்சென்று இடிக்கும்' இயல் புடையவை; சில சமயம் 'கொடிறுடைக்கும் கூன்கையனை யவை' — என இவ்வாறு எத்தனையோ கூறலாம். அத்தனை யும் ஏன்? இதனை ஈடுபட்டுப் படிக்கும் நான்கு பேர் அந்தச் சிறப்புக்களையெல்லாம் எடுத்துரைக்கட்டுமே என விட்டு விடுகிறோம். எங்கள் வெளியீடுகளை ஏற்றுப் போற்றும் தமிழகம் இதனையும் ஏற்று, எம்மை ஊக்குவிக்க வேண்டு கிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளுறை

ரமணா கங்கா

		பக்கம்
1.	கிறுக்கல்	1
2.	புழுக்கம்	2
3.	'கோடி'யில் ஒருவன்	3
4.	தனிமையைத் தேடி	4
5.	ரசிகர்கள் என் எதிரிகள்	5
6.	Sadist	6
7.	இராவணன் என்னுள்	7
8.	கசப்பு சூயிங்கம்	8
9.	கிணறு வெட்ட ...	9
10.	காவல் தெய்வம்	10
11.	வெளிச்சம்	11
12.	அழகு	12
13.	சாதிக்கோடுகள்	13
14.	இழப்பு	14
15.	அனாதைக் கோவில்	15
16.	தேகம்	16
17.	'வலி'யோர்	17
18.	விரயம்	18
19.	உண்மைக்கு ஒரு L. S. D.	19
20.	பட்ஜெட்	20
21.	ஒரு நாள் ...	21
22.	'அட்டாக்'	22

23. தேங்காய்
24. சுருதி
25. அடைமழை 25
26. எதற்கு? 26
27. பிரார்த்தனை 27
28. சுதந்திரச் சுகங்கள் 28
29. விதவைப் பூ? 29
30. வெறி 30
31. நிழலின் விளையாட்டு 31
32. உரிமைக்குக் குரல் 32

'ஜெயன்'

33. பிரசவித்தேன் 33
34. அண்ணன் யார் பக்கம்? 35
35. எனக்குள் ஓர் அற்ப ஆசை 36
36. குளியல் 38
37. 'நீலக் குழவி' 39
38. ஏசுவானேன் 40
39. நெல்லுக்கும் ஆங்கே பொசியும் 41
40. ஸ்ட்ரைக் 42
41. H ↑ D 44
42. இப்படி ஒரு வாழ்க்கை 45
43. புதிய கற்பனை 47
44. மழலைப் பாட்டு 48
45. கண்ணான கண்ணல்லவோ 50
46. எப்பிறப்பில் வளர்பிறையோ? 52

47. தடப்பெயர்ச்சி 53

48. முத்தனின் கிரகப் பிரவேசம் 55

49. கள் + நீர் = கண்ணீர் 56

50. ஈனும் பொழுதினிலே 59

51. ஈசனும் ஓஃபிலியாவும் 60

52. குழல் விளக்கின் காட்சி 62

53. விடுதலைச் சிறை 63

ஸி. இராசா

54. உடன்பிறப்புக்கு ... 65

55. கல்வி சிறந்த தமிழ்நாடு 67

56. வரதட்சணை 68

57. மன வேகம் 69

58. வழி மீது விழி வைத்து 70

59. வெண்மை ஓவியம் 71

60. இன்பச் சுமை 72

61. கறவா கறந்துண்ணும் ... 73

62. 'மந்திரிக்கும் இடம்' 74

63. எடுக்க முடியாத சுரபி 75

64. மூக்குடைப்பு 76

65. 'தீர்க்கதரிசிகள்' 77

66. ஜனநாயக அப(ா)யம் 78

67. ப(ா)திப்பு 79

68. தனியொருவனை அழித்திடுவோம் 80

69. எங்கள் தேசத்து அருங்காட்சியகம் 81

70. வழி தவறி ... 83

71. பணக்காட்டு நரிகள் 84
72. அடிமைச் சுகம் 85
73. பனந்தோப்பு 86
74. ஒளி இழந்த கண்ணினாய் 87
75. 'களுக்'கும் 'மளுக்'கும் 88
76. புத்துலகச் சிற்பிகளே ... 89
77. ஈன்ற பொழுதினும் ...? 90
78. பண்ணை நாய் 91
79. நூல் மண்டி 93
80. தேவை இரவு 94
81. வாக்குமூலம் 95

இரா. மோகன்

82. 'பெரியர்' 97
83. அறைகூவல் 98
84. செத்தும் கெடுக்கும்... 99
85. தமிழனின் தனிக்குணம் 100
86. ஓடப்பர் கேட்கிறார் ... 101
87. 'ஆசிரியப் பா' 102
88. வழிவிடா நந்திகள் 103
89. பாப்பாவுக்குத் தானே ...? 104
90. பணம் 105
91. வாழ்க்கை 106
92. அரசியல்வாதி 107
93. 'எங்களுக்குத் தெரியுமே ...' 108
94. மனிதன் 109

95. வேண்டும் என்ற மனம் 110
96. கருத்தரங்கு 111
97. ‘புதிய கோணங்கி’க்கு ... 112
98. ‘விதி’ 113
99. நடைமுறை வணிகம் 114
100. பிள்ளைச் சிறு விண்ணப்பம் 115
101. மரணம் 116
102. உண்மைக்கு விலை 117
103. சாதி இரண்டே 118
104. கல்விச் சுற்றுலா 119
105. புதிய எச்சரிக்கை 120
106. கவிதைத் துணுக்குகள் 121
107. இருட்டு 122
108. கடமையும் பலனும் 123
109. முதுமை 124
110. வேண்டுதல் 125
111. லயம் 126
112. ‘இரக்கம்’ 127
113. சின்னச் சின்ன இழை 128

கிறுக்கல்

என்

இரண்டு வயதுக் குழந்தை

தரையில்

ஏதோ கிறுக்குகிறாள்

அதில்

தப்பென்ன கண்டாளோ

எச்சிலால் அதை

அழிக்கிறாள்.

புழுக்கம்

மானம் கறுக்காமே

மச்சு வீடு நனைஞ்சா

புழுக்கம் கிளம்புது

உள்ளே-

மனசு குளிராமே

உதடு மட்டும் நனைஞ்சாலும்

புழுக்கம் கிளம்புது

உள்ளே.

'கோடி'யில் ஒருவன்

அண்ணனுக்கு

ஆகாத ஆடைகள்

அடுத்தவனுக்கு

அளவாக

அமைவதால் அவன்

என்றும்

'கோடி'யில் ஒருவனே.

தனிமையைத் தேடி

தனிமையைத் தேடி
ஆலமரக் காட்டிற்குச்
செல்கிறான்
கூடவே
Transister Radioவையும்
கொண்டு செல்கிறான்-
அவனுக்குத்
தனிமையும் வேண்டும்
துணையும் வேண்டும்.

ரசிகர்கள் என் எதிரிகள்

யார் வரவையோ
எதிர்பார்த்து நின்று
யாருடனே பயணத்தைத்
தொடங்கியவன் நான்.

என் இந்த நாடகத்தில்
வேடங்கள் போலி
வசனங்களும் போலி

ஆனல்
திரைகள் உண்மை
மேடையும் உண்மை
ரசிகர்களோ
என் எதிரிகள்.

Sadist

என் எதிரில்
  அவள் ஒரு கணம்
  வந்து மறைந்தால் போதும்
  என் உள்ளே
ஒரு பிரளயமே
  சம்பவிக்கும்.

என் வாழ்க்கையின்
  வசந்த காலங்களில்
அவளை என் முன்னே
  நிறுத்தி
அந்தப் பிரளயத்தைச்
சிருஷ்டித்துப் பார்ப்பதில்
ஒரு ஆனந்தம்
அந்த ஆண்டவனுக்கு

என் துன்பத்தில்
இன்பம் காணும்
இறைவா
நீ ஒரு Sadist.

இராவணன் என்னுள்

என்

மனம் போகும்

வன வாசத்தில்

சீதையை

இழந்தேன்;

இராவணன்

என்னுள் இருக்க

இலங்கைப் பயணம்

ஏன்?

கசப்பு சூயிங்கம்

என் மனம்

கசப்பு 'சூயிங்கம்'

ஒன்றை

அசை போட்டுக் கொண்டிருக்கிறது,

அதை

விழுங்கவும் முடியவில்லை

துப்பவும் மனமில்லை.

கிணறு வெட்ட ...

'கிறீச்'சென்ற
அபஸ்வரம் ஒழிய
வாயில் கதவுக் கீல்களில்
எண்ணெய் போட்டேன்-
'காவல் நா'யினை
இழந்தேன்.

காவல் தெய்வம்

தெருக்கோடிக்
கழிப்பிடத்திற்குக்
கடவுளைக்
காவல் வைப்பவனும்
தன்னை
ஒரு ஆஸ்திகன் என்று
சொல்லிக் கொள்கிறான்.

வெளிச்சம்

எரியும் அடுப்பும்
ஒரு விளக்கு என்ற
உண்மை
இருட்டில்
வெளிச்சமாகும்.

அழகு

எச்சில் கையில்

நீர் சொம்பெடுத்து

சோத்துத் தட்டில்

இடக்கை கழுவும்

பிஞ்சு விரல்-

அழகு.

சாதிக் கோடுகள்

விதைத்த விதைகள்
முளைத்துத் துளிர்க்கையில்
குறுக்கும் நெடுக்குமாய்
நறுக்கெனத் தெரியும்
வரப்புக் கோடுகள்
தழைத்துத் தாள் நிமிர்ந்து
தலை கனத்த
நாண் கதிர்ப் பரப்பில்
மறையும்.

மனித சாக்கடைச்
சாதி வயலிலோ
சாதி வரப்புக் கோடுகள்
ஆளான பின்தான்
ஆதர்சனமாகும்.

இழப்பு

‘சொப்பனத்தில்

சோறுண்டால்

பீடையுண்டாம்’

பகர்கிறது

பழைய பஞ்சாங்கம்

இதை நம்பிய

ஒருவன்

பாவம்

‘கற்பனை எப்ப’த்தையும்

இழந்தான்.

அனுதைக் கோவில்

பக்தனுகச்

சென்றேன் உள்ளே-

அங்கே

ஆண்டவனுனேன்

அர்ச்சகர் முன்னே.

தேகம்

நாய் கடிக்கும்
வெண்ணிரும்பு Frame-ஐ
மாமிசச் செங்கல் வைத்து
மென்தொலிப் பூச்சால் மறைத்து
X-rayக்குள் நுழையாத
பட்டாசு இதயத்துடன்
Concealed Wiring செய்யப்பட்ட
ஒரு L. I. C. கட்டடம்.

'வலி'யோர்

Break down ஆன
Benz காரையும்
கனபாடி முதலாளியையும்
ஐந்து மைல் தூரம்
சரளை ரோட்டில்
தள்ளிக் கொண்டு
வந்து சேர்த்தவர்க்கு
வலிக்கவில்லை
முதலாளிக்கு வலிக்குதாம்
அதுதான் அவர்
காலைப் பிடித்து விடுகிறார்கள்-
பங்களாவில்

விரயம்

கார்ப்பரேசன் அடிபம்புகள்
வறட்சிக் கால வரப்பிரசாதங்கள்
மழைக்கால விரயவாதிகள்
மொத்தத்தில் அவ்வப்போது
காலாவதியாகும் அவசர காலச் சட்டங்கள்.

உண்மைக்கு ஒரு L. S. D.

பஸ்ஸில்

பயணச் சீட்டுக்குப்

பயந்து

பச்சைப் பொய்யொன்று

புளுகிய

படித்த தந்தை

பள்ளியில்

பாலகனைப்

பதிவு செய்யும் வேளை

'பர்த் சர்டிபிகேட்'

பலத்துடன்

பாலகன் வயது மூன்றென

பாங்காய்ப் பகன்றாரே.

பட்ஜெட்

குட்டைப் பாவாடையாலே
மூக்கைத் தொடச்சிக்கணும்னு
ஒண்ணு
தலே குனிஞ்சியாகணும்
இல்லே
தொடை தெரிஞ்சியாகணும்.

ஒரு நாள் ...

இன்று மணக்கும்
மலர்கள்
நாளை வாடிவிடும்
ஆனல்
இன்று வாடும்
வயிறுகள்
நாளை அல்லது
ஒருநாள்
நிச்சயம் வெடிக்கும்.

'அட்டாக்'

கால் வலிக்கு

டாக்டரிடம் சென்றேன்

அவர்

Blood Test

Urine Test

E. C. G.

X-ray

என்று எதை எதையோ

சொல்லி

Bill கொடுக்க

இதுவரை இல்லாத

Heart Attack

இடியென வந்து

அழுத்தியதே.

தேங்காய்

பூஜைக்கு என்று
உடைக்கும் போது
கோணலாகவும்
சட்னிக்குச் சரிபாதியாகவும்
உடையக்கூடிய
(வி) சித்திரக்காய்.

சுருதி

வாய் பாடும்

பொய்க்கு

விழிகள் அபிநயம் பிடிக்கலாம்

ஆனல்

மனம்

சுருதி சேர்ப்பதில்லை.

அடைமழை

தகரக் கொட்டகைக்குள்
இருந்து கொண்டு
கார் ‘ஹெட்லைட்’ வெளிச்சத்தில்
மழையின் பரிமாணத்தை
அளந்து கொண்டிருப்பவனுக்கு
மழை எப்போது ஓயப்போகிறது?

எதற்கு?

நான் ஒரு காகிதக் கப்பல்

காற்றடித்து நகருவேன்

துடுப்பெதற்கு?

அதன் திசையில் செல்வேன்

சுக்கான் எதற்கு?

புல் தடுக்கி நிற்பேன்

நங்கூரம் எதற்கு?

முடிந்தவரை சுமந்து

மூழ்கும் வரை மிதப்பேன்

கரை எதற்கு?

பிரார்த்தனே

எனக்கு
முன் செல்பவன்
செல்லாக் காசு
பத்துப் பைசா
ஒண்ணைப் போட்டு
'மகராசன்' என்ற
ஆசி பெற்ருன்—
நானே
'உருப்பிடுவியா'? என்ற
சாபம் தான்
பெற்றேன்
அந்தக் குருடனிடம்:
அவன் திருவோட்டில்
நான் போட்ட
ரூபாய் நோட்டு
பறந்து செல்லாமல்
இருக்க வேண்டும்—
அதுவே
என் பிரார்த்தனே!

சுதந்திரச் சுகங்கள்

அப்பா இருந்தார்
ஒரு குழந்தையாக
நான் இருந்தேன்
கவலை இல்லை
கசப்பும் இல்லை
கற்பனையில் வீடு கட்டி
அதில் கால் நீட்டி
கண்ணயர்ந்திருந்தேன்
அவர் மறைந்தார்-
அவருடன்
அந்த சுதந்திரச் சுகங்களும்
மறைந்தன.

விதவைப் பூ?

பெண்ணைப் பூவாக
நினைத்துப் பார்க்கும் மனிதன்
பூவில்
விதவைப் பூவென ஒன்று
இல்லை என்று
உணராதது ஏன்?

வெறி

‘மத யானை ஒன்று
வருகிறது
ஓடி ஒளிந்து கொள்ளுங்கள்’
என்று எச்சரிக்கை செய்யும்
நண்பனிடம்
‘அது எந்த மதம்?’
என்று கேட்கும்
உலகமடா இது.

நிழலின் விளையாட்டு

காலையில் வழிகாட்டி
மதியம் மிதிபட்டு
மாலையில் பின்தொடரும்
உன் நிழல் —
இரவில் தன் இஷ்டத்திற்கு
விளையாடுகிறது.

உரிமைக்குக் குரல்

ஒருவர்
வாய் அசைக்க
அவருக்கு
அசரீரி ஒன்று
குரல் கொடுக்கும் —
ஒரு
தமிழ் 'ஊமை நாடகம்'
திரை அரங்கேறுகிறது.
இந்த
'ஆயா வளர்ப்புக் குழந்தைக'ளோ
உச்சி மோந்து
உன்மத்தம் அடைகிறோம்.
நாமே
உரிமைக்குக்
'குரல்'
கொடுப்பவர் தானே?

பிரசவித்தேன்

ஒருநாள் விருந்துண்டேன்
மூன்றுநாள் மருந்துண்டேன்
பத்துநாள் குளிக்கவில்லை
உள்ளுக்குள் தெளிவில்லை
உண்டதுவும் கொண்டதுவும்
ஒருநாளும் கழியவில்லை
எக்கச்சக்க மலச்சிக்கல்
என்னைச் சுற்றி நாலுபேர்
அம்மா பாட்டி ஆச்சி நர்ஸம்மா
என்னைப் பிடி உன்னைப் பிடி
சும்மா சொல்லக் கூடாது
அத்தனை வலி
பத்தாம் நாள் பிரசவித்தேன்—
பிரசவித்தேன் ஒரு மகவு.

ஒருநாள் கருக்கொண்டேன்
ஒன்பதுநாள் உறக்கமில்லை

பகலெல்லாம் பரிதவித்தேன்
இரவெல்லாம் புரண்டுருண்டேன்
கொண்டதோ ஒரு போதும்
வெளிப்பட்ட பாடில்லை
எக்கச்சக்க மனச்சிக்கல்
என்னைச் சுற்றி யாருமில்லை
உருவில்லாப் படிமங்கள்
வரியில்லா வடிவங்கள்
வரிவடிவில் உருக் கொடுக்க
எத்தனைப் போராட்டங்கள்
பத்தாம் நாள் பிரசவித்தேன் --
பிரசவித்தேன் ஒரு கவிதை.

அண்ணன் யார் பக்கம்?

தம்பிகள் இருவருக்குள் தணியாத தகராறு-
அண்ணன் யார் பக்கம் என்று
அண்ணன் மேல் அத்தனை அன்பு
வம்பின் விளைவாக ஆளுக்குப் பாதியாய்
அண்ணனைப் பிய்த்துக் கொண்டார்கள்-
இப்போது
அண்ணனே இல்லை.

எனக்குள் ஓர் அற்ப ஆசை

திரைப்படக் கொட்டகையில் தரையிலமர் கூட்டத்தின்
நெரிசலிலே இருந்து கொண்டு சீட்டி அடித்திட
எனக்குள் ஓர் அற்ப ஆசை

பாடையிலே படுத்திருக்க நாலுபேர் சுமந்தெடுக்க
சிதை ஏற்றும் நேரத்தில் விழித்தெழுந்து அச்சுறுத்த
எனக்குள் ஓர் அற்ப ஆசை

ஆட்டின் மடிக்காம்பில் அழகாக வாய்வைத்து
குட்டிபோல் முட்டி முட்டிப் பால் குடித்துப் பசியாற
எனக்குள் ஓர் அற்ப ஆசை

சலவை உடை உடுத்தி நலுங்காமல் செல்பவரின்
சட்டையில் ஓர் கீறல் பேனாவால் வரைந்திட
எனக்குள் ஓர் அற்ப ஆசை

பத்துப்பேர் வீதியிலே பறையறைந்து போகையிலே
அக்கணமே அங்கேயே அடிதவறாது ஆடிடவும்
எனக்குள் ஓர் அற்ப ஆசை

'ஜெயன்'

முட்டையிடும் கோழி ஒன்றின் குடலுக்குள்ளே இருந்து
முட்டை ஒன்றைக் கைவிரலால் எடுத்திட
எனக்குள் ஓர் அற்ப ஆசை

நோய்க்கு மருந்தாகச் சிகரெட்டை டாக்டர் தர
மறுப்பது போல் நான் மறுக்க பெற்ரோர் வற்புறுத்த
வீட்டில் இருந்தபடி புகைத்திட
எனக்குள் ஓர் அற்ப ஆசை

ஐயனர் கோயிலிலே அழகாகச் செய்திருக்கும்
வெள்ளைப் பரி மீது ஏறி அமர்ந்திட
எனக்குள் ஓர் அற்ப ஆசை.

குளியல்

தூண் ஒரு பக்கம்

தான் ஒரு பக்கம்

சுற்றிய சேலை

காற்றினில் காய

மீண்டும் அவள் உடல்

வெய்யிலில் கிடந்து

வியர்வையில் குளிக்குது.

'ஜெயன்'

'நீலக் குமிழி'

ரோஜாப்பூ இதழ்களில் ஓர் நீலக்கோடு
பூத்த நிலா முகத்தினில் ஓர் மேகக் கீற்று
புதிய இசைத்தட்டினில் ஓர் முள்ளின் கீறல்
நெய் திரளும் சட்டியில் ஓர் சிறிய வீறல்

கைக்குழந்தை யாயிருந்து அழுகையிலும்
கைவளையல் ஒலிகேட்டுச் சிரிக்கையிலும்
மெய் முழுதும் மையெனவே நீலம் பாயும்
செய்வதென்ன என்றறியாது உள்ளம் சாயும்

நடுநிசியில் சுவர்க்கோழி கூவுதல் போல்
நடக்கையில் உன் காற் சலங்கை ஒலி எழுப்பும்
நடைமாறி ஓட்டமெனப் பரிணமித்தால்
தடைப்படுமே உன்நாடி - நெஞ்சு வேகும்

ஈரைந்து திங்களிலே உருவெடுத்தாய்
மூவைந்து பருவத்தில் உருக்குலைவாய்
நாலைந்து திங்களுக்குள் எல்லாம் மாறி
நாலுசுவர்க் கல்லறை மேல் பூத்திருப்பாய்.

ஏசுவானேன்

என் உடம்பைப் பிய்த்துப் பிடுங்கி
என் ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்ற
ஈக்களுக்கும்
கொசுக்களுக்கும்
ஏசுவானேன் நான்.

நெல்லுக்கும் ஆங்கே பொசியும்

மழைத்துளிகளென வரிப்பணத்தை
மேக மடியிலேயே
கறந்த வேகத்தில் எழுந்த
ஆகாய கங்கையைக்
குழாய்களுக்குள் அடக்கி
நாடெங்கணும் அனுப்ப
தாலுகா கஜானாக்களின்
திறந்த குழாய் வழியாய்
வழிந்தோடும் நீர்
வாய்க்கால் வழி ஓடி
புல்லுக்குப் பாய்ந்த மீதி
ஒரு நெல்லுக்கும் ஆங்கே பொசியும்...

ஸ்ட்ரைக்

கூலி உயர்வுக்காக
வேலை நிறுத்தம்
நாளைக் குறித்தாயிற்று
முதல் கட்டம்—
கறுப்புச் சிறு துணியால் வெறுப்பைக் காட்டல்
துணி அணியத் துணியாதவர்கள்
கால்கள் கருத்தவர்கள்

இரண்டாம் கட்டம் —
ஒட்டு மொத்தச் சிறு விடுப்பு
கூட்டமாய்க் கலெக்டர்மேல் படையெடுப்பு

மூன்றும் கட்டம் —
அனைத்துப் பேரின் ஒத்துழைப்பால்
ஒத்துழையாமை

நான்காம் கட்டம் —
அன்றுடப் பட்டினிக்கு
உண்டான புதுப்பெயர் : உண்ணாவிரதம்

ஐந்தாம் கட்டம் —

....

சேரத் தவறுபவர் ஐந்தாம் படையினர்—
தீர்மானம் ஒருமனதாய் நிறைவேறியது
எதிர்பாராத விதமாகப் பெருவாரியான பேருக்கு
வயிற்றுப்போக்கு தலைவலி
காய்ச்சல் சொந்தவேலை
திடீர் திடீர் என வந்தது
இரண்டாம் கட்டத்தின்
திரண்ட வெற்றி
முதல் கட்டத்திலேயே
வந்து முடிந்தது.

H↑D

ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்

அடியெடுத்து வைத்திட்ட

அங்காடி வீதியென

முகத்தின் முகப்பழிந்து

நகைப்பற்று நகையற்று

நாணற்று நாணுற்று

நலமெல்லாம் நலிவுற்று

நின்ருள் —

புது விதவை

பொன்னம்மாள்.

இப்படி ஒரு வாழ்க்கை

அரிசி விலை கிலோவிற்கு
ஐந்து பைசா குறைந்தது
என்றவுடன் விழுந்தடித்து
கைப்பையோடு ஓடினேன்
மின்னல் வேகக் கடையடைப்பாம்
ஊர்வலமாம் படையெடுப்பாம்
அடுத்த நாள் விடியலிலே
கடைப் படியில் கால் வைத்தேன்
குறைந்த ஐந்து குட்டி போட்டு
ஐம்பதாய் உயர்ந்திருந்தது
நம் நாட்டில் மக்கள் மட்டுமா
குட்டி போடுகின்றனர்?
விலைகளும் தான் —
பன்றி கெட்டது போங்கள் !

கத்தரி தக்காளி காய் வகைகள்
எட்டாத உயரத்தில் கயிற்றில் தொங்கும்
காஷ்மீரத்து ஆப்பிள் ஆகும் காலம் இது!

அடுப்பு புகையாமலில்லை
ஈர விறகுகள் கரிவண்டியாய்ப் புகைவதால்
எண்ணெயே எரிபொருள் —
இல்லை—புகை பொருள்
எப்படியோ, பூனை தூங்க வாய்ப்பில்லை
நாங்கள் ஒன்றும் அன்றாடங்காய்ச்சியில்லை,
மாதங்காய்ச்சி தான்!
குடிப்பதோ கூழில்லை, கஞ்சியில்லை,
களியில்லை-ஆனாலும் (அதனால் தானோ?)
களிப்பில்லை
புளிப்பும் சலிப்பும்தான் மிச்சம்
பதினைந்து பைசா 'சிங்கிள்'
குடிக்கவா, மறக்கவா என்று
பத்துநிமிட சிந்தனைக்குப் பின்
வீட்டிற்குப் பறக்கிறேன்
வீட்டில் பிள்ளை குட்டிகளும் பறக்கின்றன-
'அப்பா தின்ன, அப்பா தின்ன?'
'அப்பா தின்ன ஒன்றுமில்லை
அப்பாவையே தின்னு' —
வெற்றுக் கைகளை நீட்டுகிறேன்
இப்படி ஒரு வாழ்க்கை.

'ஜெயன்'

புதிய கற்பனே

அடி பருத்து உடல் சிறுத்த
மூன்று பனே
முக்குத்துப் பின்னலிட்டு
B. S. A. சைக்கிள்
துப்பாக்கிச் சின்னமெனத்
திகழ்கிறது.

மழலைப் பாட்டு

எங்க தெரு கோடி வூட்லெ தங்க பொம்ம மாதிரி
அங்க ஒரு குட்டிப் பொண்ணு அரைக்கிளாசு படிக்குது
பாக்க நல்லா இருப்பா பாத்துப் பாத்துச் சிரிப்பா-அவ
பேரெ மட்டும் கேட்டா, சொல்ல மாட்டா சரியா
'எம் பேரு வதந்தி, எங்க பாப்பா பேரு ததிகலா'
'ன்னு சொல்ற போது அவ நாக்கில் தேனும் ஊறுதோ?
சொல்லில் உள்ள சிறகு தான் நாக்கில் ஒட்டிக்
கொள்ளுதோ?
'பது பாலைக் கொடுக்கும்; பது புல்லைத் தின்னும்'னு
அவ படிக்கும் பாடம் கேக்க மனம் நாடும்
என்னிக்காவது ஒரு நாள் அவளும் என்னோடு ஆடுவா
அன்னிக்குன்னு பாத்து அவளை அழப்பண்ண
'பத்தைத் தட்டை போட்ட இந்தப் பொண்ணைத்
தேக்க மாட்டோம்'
'ன்னு கிண்டலாகச் சொல்லுகின்ற போது
என்னைப் பாத்து பதிலுக்கு மெல்ல மெல்லச் சிரிப்பா
பாக்க மட்டும் பாப்பா பேச்சைக் கேட்டுப் பாத்தா

பத்துப் பிள்ளை பெத்த பெரிய மனுஷி மா’ரி பேசுவா
அம்மா கூட சொல்வாங்க ‘அவ வயசுப்
பிள்ளைங்கள்’லே
அவளை மா’ரிப் பேசக் கற்ற பெண்ணே இல்லே’ன்னு
’ங்கம்மாவும் நானும் வசந்தியம்மா வூட்டுக்கு
எதுக்காவோ போனேம் எதுக்குன்னு நெனவில்லெ
வசந்தியம்மா நாங்கல்லாம் ஒண்ணுத்தான் சாப்’டோம்
பேசக் கற்ற வசந்தி தனியா என்னெக் கூப்பிட்டு
‘இதோ பாரு, தெல்லம் தொல்ல வந்ததெக்
கேட்டுக்கோ
யாரோடு கூடயும் தோறு தாப்’டும் போது
தித்தம் போடக் கூடாதுன்னு ’ங்கப்பா தொன்ரு’
என்று மெல்லத் தொன்ன, ஒட்டப் பல்லு தெரிய
தொன்ன தொல்லைக் கேட்டு ரொம்ப ரொம்ப
திரித்தேன்.

கண்ணுன கண்ணல்லவோ

கடலும் வானும் கலக்குமிடம் எது என்றறியாது
தொடுவான் பார்த்த நாட்கள் போச்சு.

ஹெர்குலிஸ் எறிந்த டிஸ்கஸ் போல
அசைந்து குலுங்கி எழுந்திடும் முழுநிலா
அறிவுக்குரிசில் ஐன்ஸ்டைன் தலை போல்
பஞ்சு மிட்டாய் போல்
தெரிந்த அந்த நாட்களும் போச்சு.

பூங்காவதனில் தூங்கா மலர்கள்
பூவென இலையெனப் பிரிந்து தோன்ருமல்
மொத்தமாய் 'மொத்தை'யாய்
நாவிதன் கடை ஓவியம் போலத்
தெரிந்த விந்தை நாட்களும் போச்சு.

இன்னர் இன்னர் என்றறியாது
இல்லார் உள்ளார் என்றுணராது
ஐந்தடிக்கு அப்பால் வருவோர் போவோர்

அனைவரையும் நான் சமமாய்ப் பார்த்த
அந்த நாட்களும் இன்றோடு போச்சு,

Nக்கும் Hக்கும் வித்தியாசமில்லாமல்
Dக்கும் Oவுக்கும் மாறுபாடில்லாமல்
போனதால் நானும் டாக்டரிடம்
போனேன்.

'கழற்றாமல் போட்டிரு' என்று சொல்லி
அவர் மாட்டிய கண்ணாடி
மாற்றுதே காட்சிகளை.

எப்பிறப்பில் வளர்பிறையோ?

வளர்பிறையில் பிறந்த மகள்
வளர்பிறையில் பெயர் சூட்டி
வளர்பிறையில் அமுதூட்டி
வளர்த்து வந்த வேளை –

நோய்வாயில் சாய்ந்த அவள்
தேய்பிறையாய் மாறி வர
தேயும் நடை சோரும் உடல்
மாய்ந்திடவும் வாய்ப்புளது

அவள்
இப்பிறப்பில் வளர்பிறையோ,
எப்பிறப்பில் வளர்பிறையோ?

தடப் பெயர்ச்சி

காற்றெதிர்த் திசையில் சில பல
காலடித் தொலேவில் நின்று
திறந்த சன்னல் வழியாய்ப் பார்த்தால்
பாண்டொமைம், கதகளி, மாஞே ஆக்டிங்
ஊமை போல் வாயசைத்துக்
கர்ணனுய் வாரி வழங்கும் ஆசிரியர்
எதிரே பெஞ்சுகளில் -
சிலேயாய்ச் சமைந்து விட்ட
எதிர்காலச் சிற்பிகள் –
இளேய பாரதம் – பாரதத் தூண்கள் -
முடி சூடா மன்னர்கள்
உட்கார்ந்தே தூங்கும் பிஞ்சுத்
தூங்குமூஞ்சி மரங்கள்
ஒலித்தது காற்ருேடு
ஒரு முனேக்கும் மறு முனேக்கும்
தொடர்பே இல்லே
காற்ருே கள்வன்?

வகுப்பிற்கு வெளியே
மேஸ்திரி விழிப்பின் கீழே
மணல் பெயர் எறும்புக் கூட்டம்
சிற்றூள் உழைப்பினாலே
உயர்ந்திடும்
கல்லாலான கல்லூரிக் கட்டடம் நாளை
ஒரு முனைக்கும் மறு முனைக்கும்
தொடர்பு இங்கே.
கட்டிய கட்டடத்துள்
பாடங்கள் இடப்பெயர்ச்சி,
வழியில் எங்கோ
தடப் பெயர்ச்சி.

முத்தனின் கிரகப் பிரவேசம்

முத்தனும் முனியம்மாவும்
கொத்தனுரின்றித் தாமே
கட்டிய வீட்டில் பிரவேசிக்கும் நாளன்று
என்னையும் அழைத்துச் சென்ருர்கள்
எல்லோரும்
வீட்டைச் சுற்றி நின்று பார்த்தோம்
வீட்டுள் நின்று சுற்றிலும் பார்த்தோம்.
கட்டிய வீட்டிற்குக்
கரம்பு சொல்லக் கூடாது.
கண்ணேறு கழிக்க
வீட்டின் முன் கட்டியிருந்த
கண்ணு, மீசை தீட்டிய பூசணிக்காயும்
உட்சுவரில் மாட்டியிருந்த
அகோர உருவமும் -
சும்மா சொல்லக் கூடாது
அழகாகவே இருந்தன.

கள் + நீர் = கண்ணீர்

பாளை வெடித்து விடும்
பத்து நூறு காய்த்து விடும்
வேளை வரும் முன்னே
வேதனை யேனோ எனக்கு?

பத்துகிளை நானெடுத்தேன்
பாங்காகக் கீற்று விட்டேன்
அத்தனையும் வெட்டி விட்டான்
செத்தமரம் நானானேன்

பூத்துக் குலுங்கு முன்னே
பொய்த்தனவோ எங்கனவு
காய்த்துக் களிக்கு முன்னே
கத்தி படக் காரணமேன்?

மூத்த மரம் பாத்து
முளைத்திட ஆசைப்பட்டேன்

'ஜெயன்'

நேத்து முளேச்ச இவன்
    நோக்கு பட்டு நாணிளேச்சேன்

ஆகாயம் பாத்து நின்னு
    ஆசையாய்த் தலே நிமிர்ந்தேன்
ஆடை பறித்து விட்டான்
    அம்மணமாய்த் தலே குனிந்தேன்

ஆளாகும் முன்னுலே
    அடிபட்டுப் போனேனே
பாளே விரிக்கு முன்னே
    பானே கட்டி விட்டானே

வெட்கங் கெட்ட மனுஷனிவன்
    கட்குடத்தைக் கட்டுகிறுன்
எட்டாத உயரத்தும்
    ஏறிவந்து வெட்டுகிறுன்

கள் நீர் எடுத்து எந்தன்
　　கண்ணீர் குடிக்கின்றான்
உள்ள மதி கெட்டு இந்த
　　உலுத்தன் சிரிக்கின்றான்

பாவியவன் புத்திகெட
　　பாவை நான் பலியானேன்
ஆவியோ பிரியுதில்லே
　　ஆற்றாமை குறையுதில்லே

பானைசிரித்து விட்டால்
　　பல நூறு நான் தருவேன்
பானை கழற்றிடடா
　　பாவிமவ பெத்தவனே.

ஈனும் பொழுதினிலே

கால்வாய் வழியாகக் காவிரியே பெருக்கெடுக்க
மேல்வாய் பற்கிட்ட முன்கை விறைத்திருக்க
தாயாகப் போகுமவள் ஓயாது ஓலமிட
பேயாய்த் தோன்றுமொரு சேயும் புவி சேரத்
தானே தலைப்படவும் -- தானே நனைந்திடவும் —
தானே பிறந்தக்கால் தாளாது பெற்றவலி
மீண்டும் இப்போது தான் ஈயப் பெற்றாளே.
வேண்டும் ஒரு விளக்கம் யாரே தரவல்லீர் —
ஈனும் பொழுதினிலே தோன்றும் வலியதனில்
தாயின் வலி பெரிதோ, சேயின் வலி பெரிதோ?

ஈசனும் ஓஃபிலியாவும்

ஒரு புறம் மனைவி
மறுபுறம் மக்கள்
நிறுத்திவிட்ட ஃபேனுக்கடியில்
விரித்திட்ட முக்கோணப் படுக்கை
கம்பளிப் போர்வைக்குள் என்மகள் ஒரு
கம்பளிப் பூச்சி
எல்லாம் 'உல்ல'ன்றல் ஆனவற்றுள்
உறங்கிடும் மற்றவர்-
ஆடாய்ப் பிறக்காததுதான் ஒரு குறை!
இருமலின் உறுமல்
மறைந்ததும் கேட்கும்
காற்றுக் கருவியில் கப்பியிருக்கும்
கோழைக் கம்பியின் இழுப்பினில் எழும்
நயலய மில்லாப்
பயங்கர இசை.
பசையெனப் பற்றிய
இசை நாண் நரம்புகள்
தொண்டைக் குழிக்குள்
சண்டைக் குழறல்.
வாழையின் நாராய் வெண்டையின் நாராய்
கோழையின் நார்கள்
'ஐஸிகிள்ஸ்' ஊசிபோல்
பட் பட் படக்கென ஒடியும்;
இசை முடியாது
சுவாச கோசங்கள் பேசும் அற்புதம்

சுருதி சரியில்லை
வேதனை முனகலில்
வேதம் ஒலிக்கும்.
தூறல் சாரல் சாரளத்திடுக்கில்
வீசும் ஊதல் காற்றின் சாதகம்
எது பட்டாலும் பாதகம்.
மனைவி மக்களின் திணறும் மூச்சில்
மறைந்து ஒலிக்கும் மரணகீதம்
ஈசனுக்கிசைந்த ஈழத்திசையும்
ஒஃபிலியாவின் உள் மனத்தோலமும்
இணைந்து விளைந்ததோ
ஈசனோஃபீலியா?
காசு கொடுத்து வைத்தியம் பார்த்தும்
காச நோயாய் மாறும் வாய்ப்பு
மோசம் செய்யும் ஆஸ்மாவா வெனில்
இல்லை என்பார்.
இளம் உயிர்க்கொல்லிக்கு ஒருபெயர்
ஆஸ்மடிக் பிராங்கைடிஸ்
அதுவே முதியவர்க்காயின்
பிராங்கியல் ஆஸ்மா.
நோய் ஒன்று
பெயர் இரண்டு
என் வீட்டில மூன்று பேர்
இசைக் குயிலாகக்
கூவிடக் கூவிடக்
கேவிடும் என் மனம்,

குழல் விளக்கின் காட்சி

மின்சாரம் குறைந்து வரும் போது குழல்
விளக்கின் இரு முனை வழங்கும் காட்சி:

நீரினிலே கால் சிக்கித் தவிக்கும் விட்டில்
பூச்சி யொன்றின் பூஞ்சிறகாய்,

ஓடி வந்த நாயின் இதயம்
துடிக்கின்ற துடிப்பாய்,

நாய்க்கணையின் பேய்ப் பிடியில்
குழந்தை விடும் மூச்சாய்,

நொடிக்கு ஒரு நூறு தரம்
சொடுக்கு விட்டதைப் போல்,

அணைந்தெரிந்து அணைந்தெரிந்து
தொடர்ந்தாற் போல் துடிக்க
பூப்போட்ட வேட்டியினை எடுத்துதறி உடுக்க

பூக்களெலாம் பொரிச் சோளம்
போலன்றோ உதிரும்!

கையசைப்பில் ஐந்நூறு
விரலலைகள் செய்யும்

தொங்கு சுழல் விசிறிக்கு
மேலிருக்கும் விளக்கு

கீழ்ச் சிந்தும் காட்சி போலத்
தோன்றுதிந்த அழகு.

விடுதலைச் சிறை

நடு நவம்பர் முன் இரவு
சுவைமிகு சங்கீத சம்மேளனம்
இருநூறு வயலின் இசை
விகார ஆலாபனை
என் இரு கரங்களும்
இருதசை முத்தசை
இடவலப் புஜங்கள்
காது கால் இவற்றின் மீது விழ
எழும் தாளம்
ஆதி
அந்தமில்லாதது
பாதம் நின்ற இடம் கால் நீண்டு வளர்ந்து
பர்வதம்
இனியும் தாங்காது
கொசுவலைக்குள் விடுதலைச் சிறை புகுந்தேன்

என்னைச் சுற்றி ஹிந்துஸ்தானி இசை
முறுக்கவிழ்ந்த 'கிராம' ஃபோன்
விசைகுறைந்தே தரும் இசையில்
பிஸ்மில்லாகான் குழுவினர் ஷெனாய்
ஏக்தாள் — தீன் தாள்

பிஸ்மில்லா!

வலையுள் நான்கு கொலைகள்

வெளியில் எமனின் சிசுக்கள்

தழை மழைத்துளிகளாய்

சரசர, பறபற —

இசைத் தென்றல் காற்றில்

அசைந்திடும் கொசுவலை

அசந்திடும் கண்கள்.

உடன்பிறப்புக்கு ....

"என் ஆருயிரே...
நீ நினைத்தால்
நீரிலும் நடக்கலாம்
நெருப்பிலும் உறங்கலாம்
சூரியனைக்கூட துண்டு போடலாம்!
ராஜ பாட்டையில் நடைபோட வேண்டியவன் நீ
ஏன்
இந்த ஒற்றையடிப் பாதைப் பயணம்?
சொல்லேர் உழவன் நீ
உன்
கருத்துக்களைக் குத்தகைக்கு விடாதே
அவர்கள்
தங்கள் இஷ்டம்போல் பயிர்செய்து கொள்-
வார்கள்.
விலைமதிக்க முடியாத எண்ணங்கள்
உன்னுடையவை
அவற்றை
அடகு வைத்துவிடாதே
அவை
மீட்கமுடியாமல் முழுகிப் போனாலும் போகும்.

ஒரு வகையில்

நீ

பெண் போலத்தான்

ஏனென்றால்

உன்னால்

ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும்.

நீ வெட்கப்படுவதாக இருந்தால்

உன் பெண்மையை மாற்றிக் கொள்;

அழிப்பதை நிறுத்திக் கொள்.

உறுதியாகச் சொல்லப் போனால்

இந்த உலகின்

உண்மையான பிரம்மா

நீ தான்,

நீ தான்,

நீயே தான்!''

கல்வி சிறந்த தமிழ்நாடு

இந்தப் பட்டங்களெல்லாம்
செப்புப் பட்டயங்கள்
என்று
ஒரு காலத்தில் நாங்கள்
நினைத்ததுண்டு.
இன்று உணர்கிறோம்,
இவை
எங்கள் மூளை விபசாரத்திற்காக
நாங்கள் பெற்ற
அனுமதிச் சீட்டுகள்.

வரதட்சணை

ஓடுமீன் ஓட
உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாம் —
இந்த
தந்தைக் கொக்கு.

மன வேகம்

பொறுமையை இழந்த மனிதன்
அதன் அருமையை உணர்ந்து
இறைவனை வேண்டினன் :
"எல்லாம் வல்ல ஆண்டவரே!
எனக்குப் பொறுமையைத் தாரும்
தாரும் தாரும்
இன்றே தாரும்
இப்பொழுதே தாரும்!"

வழி மீது விழி வைத்து

வற்றாத ஊற்றிருந்தும்
திறந்துவிடும் மதகிருந்தும்
புரண்டுவிழும் இருகயல்கள்
துடித்துத் துடித்துச்
சிவந்து போய்
உருண்டு விழுந்து
உயிருக்குப் போராடுவது
என்ன புதுமை!

வெண்மை ஓவியம்

இவன்

காலையில் எழுந்ததும்

ஓவியம் வரைகின்றான்

தூரிகை கையிலெடுத்து

குழைவைப் ‘படுக்க’ வைத்து

‘ஆ’ என்றும் ‘ஈ’ என்றும்

மவுன உணர்ச்சி காட்டி

இவன் வரையும் ஓவியம்

பற்களின் வெள்ளித்திரையில் —

‘பளிச் ...’

இன்பச் சுமை

சுமை ஏற்றிக்கொண்டு இங்கு
காத வழி போனாலும்
கால் கடுப்பதில்லை கை வலிப்பதில்லை
முகம் சுளிப்பதில்லை மனம் வெறுப்பதில்லை.

சுமைதாங்கி கண்டாலும்
இறக்கி வைக்க எண்ணாமல்
இமை பதுங்கி ஒளிந்திருக்கும்
கண் போலக் காத்திருக்கும்.

பாதிவழி போனாலும்
மீதிவழி பயமிருக்கும்
இறக்கி வைத்த பின்னாலே —
முகம் பார்க்கத் துடித்திருக்கும்
யார் பதிப்பு என்று பார்க்க
ஆவல் மிகக் கொண்டிருக்கும்.

உயிர் போகும் என்றாலும்
உறுதி கொஞ்சம் கொண்டிருக்கும்
உயிர் மீண்டும் வந்தவுடன்
உருக் கொஞ்சம் குலைந்திருக்கும்.

உயிர்மூச்சைப் பிடித்திழுத்துப்
பெருமூச்சாய் விட்டதெல்லாம்
சிறுமூச்சாய்ப் பிறந்திங்கு
முழுமூச்சாய் வாழுதய்யா.

கறவா கறந்துண்ணும்...

"கறந்து கறந்து
படிக்க வைத்தேனே,
இப்படி
பத்தாயிரம் கேட்டால்
எங்கே போவது?"
என்று கேட்ட
பால்காரப் பசுபதிக்கு
தேர்வுக் கமிஷன்
தலைவர் சொன்னார்:

"வைத்தியம் செய்யத்
தொடங்கி விட்டால்
வட்டியும் முதலுமாய்க்
கறந்து விடுவான்
கவலை வேண்டாம்!"

'மந்திரிக்கும் இடம்'

'மந்திரிக்கும் இடம்'
ஒன்றைப் பார்த்ததுமே —
"பதவி பறி போன
எங்கள்
மந்திரிக்கும் இடம் இங்கு
தரலாமே" என்று
பொருத்தமான புகலிடத்தைக்
கண்டு களித்தார்
தொண்டர் அடிப்பொடி!

எடுக்க முடியாத சுரபி

எங்களிடமும்
அமுதசுரபி இருக்கிறது
கையிலில்லை,
நெஞ்சில்.

அது
எடுக்க எடுக்கக்
குறையாது —
இதுவோ
எடுக்கவே முடியாது!

மூக்குடைப்பு

படையெடுத்துச் சென்று
கடையடைப்பை
வெற்றிகரமாய்
நடத்தி முடித்த நான்
இப்போது —
என்வீட்டின் முன்னே
கடைதிறப்புப் பாடுகின்றேன் :
" கன்னித்தமிழே காவிரிஆறே
கண்ணே கண்மணியே
மணவாளன் வந்தேன்,
மணிக்கதவம் தாள்திறவாய்!"

‘தீர்க்கதரிசிகள்’

பசைவரும் முன்

ஒட்டிக் கொள்ள

முந்திய இவர்களெல்லாம்

இந்தப் பசை

உலர்ந்து போகுமுன்

உதிர்ந்து விடுகிறார்களே-

உலரும் நேரத்தை

எப்படி இவர்கள்

உணர்ந்து கொள்கிறார்கள்?

ஜனநாயக அப (ா)யம்

எல்லோரும்

இந்நாட்டு மன்னர்கள்

ஆகிவிட்டதால்

யார்

யாரைத் தேர்ந்தெடுப்பது

என்று

சண்டையிட்டுத் திரியும்

முடிசூடா மன்னர்கள் — இவர்கள்.

இந்த ஜனநாயகக் கோட்டையிலே

நெருக்கப்பட்டு

பிதுங்கி வழிந்து

உதிர்ந்து விழுந்து

அகழி முதலையின்

அகல வாய்க்கு

அர்ப்பணித்துக் கொள்ளும்

அபயம் அளிக்க

ஆளில்லா தேசத்துக்

கஜேந்திரர்கள் — நாங்கள்.

ப(ா)திப்பு

நடிகை நளினாவுக்கு

இன்று

மீண்டும் திருமணம் –

இது

இவள் கற்பின்

ஐந்தாம் பதிப்பு.

தனியொருவனை அழித்திடுவோம்

முத்துக் குளிக்க எண்ணி
தமிழ்க் கடலில் மூழ்கிய என்னை
கடித்ததுவோ கையைப் பிள்ளைச்சுறு
காலைச் செட்டி நண்டு
தலையை முதலி விலாங்கு.

தொண்டையைப் பிடித்ததுவோ
முன்னேறிய சிலந்தி,
இரத்தம் குடித்ததுவோ
பின்தங்கிய சிலந்தி.

முத்துக் குளிக்க வந்த நான்
மூச்சடைக்கக் கீழிறங்கி
மணல் மெத்தைப் பள்ளிக்கு
கடைசிப் பயணம் சென்றாலும்
தனிப்பெருமை எனக்குண்டு
தமிழச் சாதி நானென்று !
என்றாலும்
கேட்க யாருண்டு?

எங்கள் தேசத்து அருங்காட்சியகம்

அவன்

தோளின் மையத்தில்
விழுந்த குழியினின்றும்
எழுந்த வரிக்கோட்டுத் தசைகள்!

தோளினின்றும் இறங்கிய
கரத்தின் நடுவில் பொங்கியெழும்
தசைக் கொத்து!

கைவிரல்களின் மேல்
நளினமிட்டுப் படர்ந்த
நரம்புப் பாம்புகள்!
முரட்டு விரல்களின் ஆணவம்!

நடுவில் கோடுவிட்டு
நெஞ்சத்தில் திரண்டு எழுந்த
தசைத் திரட்சி!
அழகின் ஆவணக் களரி!

இடுப்பின் மேல் எழுந்த
தசை வரிகள்!
அழகுச் சொல்லின்
விளக்க வரிகள்!

நெஞ்சின் கீழ் உதித்த
உள்ளடங்கிய
வயிற்றின் மடிப்பு
பட்டினியின் படப்பிடிப்பு!

இது
அழகு ஓவியம்!
எங்கள்
வறுமைக் காப்பகம்!

வழி தவறி ...

உங்கள் நெஞ்சில்

பற்றி எரியும்

நெருப்பை அணைக்க

இந்தக் கண்ணீருக்குத்

தெரியாது போலும்.

இல்லாவிட்டால்,

இவை

வழி தவறி

வெளியே வந்து

வீணாக விழுமா?

பணக்காட்டு நரிகள்

இரவெல்லாம் பூங்காடாகிப் பின்
பகலெல்லாம் வெறுங்காடாகிவிட்ட
வெற்று வானத்தைப் போல
இந்தத்
தட்டுமுட்டுச் சேரியெல்லாம்
பிணக்காடாகிக் கொஞ்சம்
மணக்காதா என்று
கணக்கோடு நின்று
நித்தம் ஏங்கித் தவம் புரியும்
இந்தப்
பணக்காட்டுக் குள்ள நரிகள்.

அடிமைச் சுகம்

இந்த
அரசாங்க வேலைக்கு
வருவதற்கு முன்
இவன்
அதியமான் கொட்டிலில்
அமைதித் தவம் புரிந்த
கோடு நுனி சிதைந்த ஈட்டிதான்.
இப்போது—
இவன்
பீலியணியப் பெற்று
கண்டிர நோன்காழ் திருத்தி
நெய்யணியப் பெற்று
கடியுடை வியனகரில்
அடிமைச் சுகம் அனுபவிக்கும்
சரித்திர நாயகன்.

பனங்தோப்பு

வானத் திரையில்
வண்ண ஓவியம் தீட்ட
மதர்த்து நிமிர்ந்து நிற்கும்
நிலமகளின் தூரிகைகள்
ஏனோ
எட்ட முடியாமல் ஏங்குகின்றன.

ஒளி இழந்த கண்ணிருய்

கழிப்பிடங்களின் சுவரில்
கரிப்படங்கள் வரைந்து
உருவாகி வரும்
ரவி வர்மாக்கள் !

‘சுவற்றில் நோட்டீஸ் ஒட்டாதே’
என்று
சுவர் முழுதும் ஒட்டித்தள்ளும்
கலைப்பித்தர்கள் !

‘சிந்தித்தால் வாய் வலிக்கும்’
என்று
சித்தாந்தம் பேசுகின்ற
வெந்த மூளைக்குச்
சொந்தக்காரர்கள் !

ஐந்தாண்டுக்கொரு முறை
ஏதாவதொரு பத்திரிகையைக்
குத்தகைக்கு எடுத்து
எழுத்து விதையால்
பதர்க் கருத்தை விளைவிக்கும்
சொல்லேர் உழவர்கள் !

‘களுக்’கும் ‘மளுக்’கும்

‘களுக்’கென்று சிரித்து
கடைக்கண்ணுல் நோக்கி
விழி வலையில் பிடித்து
பார்வை உலையில்
போட்டாள் பாவி—
இந்த
சுந்தரப் பறவையின்
சுதந்திர இறக்கை
‘மளுக்’ ...

கி. இராசா

புத்துலகச் சிற்பிகளே...

முனை உடைந்து போன
உளிகளால்—
எங்களை
வடித்து எடுப்பதற்குப் பதிலாக,
உடைத்துக் கெடுக்கும்
புத்துலகச் சிற்பிகளே!
உங்கள் உளிகளை
எங்களிடம் தாருங்கள்
எங்கள்
நெஞ்ச உலையில் போட்டு
கொஞ்சம் கூராக்கித் தருகிறோம்.

ஈன்றபொழுதினும்...?

இறுதி நாளில்
அவளுக்குக்
கொள்ளி வைப்பதற்காக
வாழ்நாளெல்லாம்
அவள் வயிற்றில்
கொள்ளிக்கட்டையைச்
சொருகிப் பழகும்
புத்திரச் சோகங்கள்.

பண்ணை நாய்

பரந்தாமன்-
படித்தான்,
பட்டம் பெற்றான்,
பத்தோடு பதினொன்றாய்ப்
பட்டினத்து வீதிகளில்
படியேறிப் படியேறிப்
பல்லிளித்துப் பழகினான்,
தலை சொரியும் கலையெல்லாம்
கை நிறையக் கற்றான்,

பக்கத்து ஊர்ப் பண்ணையார்-
பலவேசம் பிள்ளை
பட்டப் பெயரோ
பல்கலைச் செல்வர்!

அவர்
பள்ளியறை ஊடலில்
பக்குவம் இழந்த நேரத்தில்
பண்ணையாரை நாடினான் பரந்தாமன்,
பழமரத்தை நாடும் பறவை போல.

எரிந்து விழுந்தார் ஏமாற்றத்தால் :
"வேலையும் இல்லை, கூலியும் இல்லை!"
வள்ளென்று விழுந்தார் வாய்க்கெட்-
டாததால்
"அறிவு கெட்ட நாயே, போ வெளியே!"
ஊர்ப்பட்டம் உண்மைப் பட்டத்தைத்
துரத்தியது-
உள்ளத்தில் ஊமைக் காயம்!
பார்த்தான் பரந்தாமன்—
பக்கத்து வீட்டில் தொங்கிய போர்டு
இப்போது
பண்ணையார் வீட்டில்.
'ஏதோ என்னால் முடிந்தது'
என்று சொல்லி
போர்டில் இருந்ததை
வாய்விட்டுப் படித்தான் :
" நாய் ஜாக்கிரதை."

நூல் மண்டி

மாரத வீரர் மலிந்த நன்னாட்டில்
மக்கள் பெருக்கத்தைக்
குறைக்க வந்த
நூல்களின் பெருக்கம்,
மக்கள் பதிப்பு
மறுபதிப்பு
என்றாகிக் கடைசியில்
மலிவுப் பதிப்பாய் —
மக்கள் பெருக்கத்தின்
பெருக்கத்தைக் காட்டிலும்
பெருகி விட்டது !

தேவை இரவு

நாமிருக்கும் குடிவெறியில்
மேலும் ஒரு 'பெக்'
இரவு!
இதில்-
இன்பம் என்னும்
முருங்கை மரத்தின் மேல் ஏறும்
மனித வேதாளங்கள்!
இரவுக் குளத்தின்
கரையில் நின்ற
மரத்தில் ஏறிய
கலியுகக் கிருஷ்ணர்கள்!

'உடையைத் தா' என்று
கெஞ்சாத கோபியர்கள்!
உடையாத உள்ளத்தோடு
கொஞ்சும் கோமளங்கள்!
நாணம் கூட நடனம் ஆடுகிறது,
'காபரே' நடனம்
அட, சே...!

ஆனாலும்,
இரவு தேவைதான்—
மழலைக்கும்
கவிஞனுக்கும்
எனக்கும்.

வாக்குமூலம்

கன்னியரின்
கடைப்பார்வை மத்துக்கள்
என் நெஞ்சைக்
கடைய வேண்டாம் — என்னைக்
கடையனுக்க வேண்டாம்!
விழிப்பார்வை வண்டுகள்
என் மனதைக்
குடைய வேண்டாம் — என்னைக்
குருடனுக்க வேண்டாம்!
ஏந்திழையின்
எழிலுறு வாசகங்கள்
என் உயிரைக்
குடிக்க வேண்டாம் — என்னைப்
பிணமாக்க வேண்டாம்!
கானல் வரிப் பாடல்கள்
காதல் வரி

படிக்க வேண்டாம் — என்னை
மணக்க வேண்டாம்!
மாறுக-
விடியும், வாழ்க்கை விடியும் என்று
இருளின் மடியில்
வறுமைப் பாலை
அருந்தி
தாகம் தணியாமல்
விக்கல் எடுக்கும்
வக்கற்றதுகளுக்கும்
வாழ வழியற்றதுகளுக்கும்
என் பாடல்-
விடியலில் குமுறிப் பெய்த
கார்கால மழையாகட்டும்!

'பெரியர்'

உயிருக்கு உயிராய்க்
கூடிக் குலவும்
நண்பர்கள் இருவர்
உயர்பதவிக்கு மனுப்போட்டனர்
ஒருவருக்கு ஒருவர்
சொல்லிக் கொள்ளாமல்—
'சொல்லாமல் செய்வர் பெரியர்!'

அறைகூவல்

உறங்கிக் கிடக்கும்

என்னைத்

தட்டி எழுப்பி,

எனக்கு

உணர்வினை ஊட்டத்

துடிக்கும்

பெரியோரே, தாய்மாரே

ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்!

முந்தி வருவோர்க்கு

மூன்று பரிசுகள் தருவேன் :

முதல் பரிசு—சிலுவை

இரண்டாம் பரிசு—நஞ்சு

மூன்றும் பரிசு—துப்பாக்கிக் குண்டு

பிந்தி வருவோர்க்கு

ஆறுதல் பரிசு உண்டு.

செத்தும் கெடுக்கும்...

செத்தும் கொடுத்த
சீதக்காதிகள்
வாழ்ந்த காலமெல்லாம்
மலையேறி விட்டது...
இப்போது
செத்தும் கெடுக்கும்
சீதக்காதிகளே
இருந்து வருகிறார்கள்!

தமிழனின் தனிக்குணம்

தமிழன் என்ருேர்
இனமுண்டு
தனியே அவர்க்கொரு
குணமுண்டு ...

எல்லோரும் இன்புற்றிருக்கவே
நினைப்பான் - ஆனல்
யாரும் இன்புற்றிருந்தாலோ
பொறுக்கவே மாட்டான்!

தமிழன் என்ருேர்
இனமுண்டு
தனியே அவர்க்கொரு
குணமுண்டு ....

ஓடப்பர் கேட்கிறார் ...

பர மண்டலத்தில்
இருக்கும்
எங்கள் பிதாவே!
ஒரு கன்னத்தில்
அடித்தால்
மறு கன்னத்தையும்
காட்டலாம்-
ஒட்டிய வயிற்றில்
அடித்தால்
ஏழை நாங்கள்
என்ன செய்வோம்?

‘ஆசிரியப் பா’

பௌர்ணமிக்கு மறுநாள்
நீல வானத்தில்
நேரம் கழித்து
மெல்லப் புறப்பட்டு
வந்தது நிலவு—
சாதுவான ஆசிரியரின்
வகுப்புக்கு வரும்
மாணவனைப் போல்.

வழிவிடா நந்திகள்

அல்லற்பட்டு ஆற்ருது
அழுது நிற்கும் பக்தர்களுக்கு
வரம் கொடுக்கத்
தெய்வங்கள் விரும்பிஞலும்–
வழிவிட்டு நிற்க
நந்திகளுக்கு மனமில்லே.

பாப்பாவுக்குத் தானே...?

சாதி மாநாட்டைத்

தொடங்கி வைத்துப் பேசிய

சிறப்புச் சொற்பொழிவாளர்

சரியாய்க் கேட்டார்

ஒரு கேள்வி :

'சாதிகள் இல்லையென்று

பாப்பாவுக்குத் தானே

பாடினார் பாரதியார்,

பெரியவர்களுக்கு இல்லையே?'

இரா. மோகன்

பணம்

எல்லாப் பொருளும்
இதன்பால் உள —
இதன்பால் இல்லாத
எப்பொருளும் இல்லையால் ...

வாழ்க்கை

படித்து முடித்துப்
போட்டு விட்ட
நேற்றைய செய்தித்தாள்

எப்படிப் போட்டாலும்
விடை வராத
சிக்கலான கணக்கு

சாவை நோக்கிப்
பீடுநடை போடும்
சோக நாடகம்

எல்லோருக்கும் தெரிந்த
யாரும் கவலைப்படாத
சீரிய தத்துவம்

காலத்தின் கோலத்தால்
பழுப்பேறிப் போன
பழைய புத்தகம்.

இரா. மோகன்

அரசியல்வாதி

கல் தோன்றி
மண் தோன்றாக்
காலத்தே
வாளொடு
முன் தோன்றி
மூத்த குடிமகன்!

செத்தால் தான்
பிழைக்காத —
பிழைப்புக்காக
எதையும் செய்யும்
ஆயிரத்தில் ஒருவன்!

'எங்களுக்குத் தெரியுமே...'

ஏ, பிணங்களே !

உங்களுக்குப்

பணம் என்ருல்

வாயைத்

திறக்கத் தானே

தெரியும் —

எங்களுக்குப்

பணம் என்ருல்

வாயை

மூடிக் கொள்ளவும்

தெரியுமே?

மனிதன்

நினைத்ததைச்
சொல்ல முடியாத,
சொன்னதைச்
செய்ய முடியாத,
செய்ததைச்
சொல்ல முடியாத-
விசித்திரப் பிறவி!

வேண்டும் என்ற மனம்

பஸ்ஸில் நிற்க
இடம் கிடைத்தாலே
போதும் என்று
முண்டியடித்து ஏறி-
ஏறியதும் உட்கார
இடம் கிடைத்தால்
நன்றாக இருக்குமே
என்று ஆசைப்பட்டு-
உட்கார ஓர்
இடமும் கிடைத்ததும்
ஜன்னலோரத்து 'சீட்'
கிடைக்கவில்லையே என்று
ஏங்குது மனம் ...

கருத்தரங்கு

சொன்னதைச் சொல்லும்
கிளிகள்
இங்கே
சொந்தம் கொண்டாடுகின்றன –

சொல்லியே திரியும்
புலிகள்
வாயால்
வீரம் பேசுகின்றன.

'புதிய கோணங்கி'க்கு...

சூதும் பாவமும்
பண்ணும் படிச்சவன்
போகவில்லை போகவில்லை
'ஐயோ'வென்று போகவில்லை-
வாழ்கிருன் வாழ்கிருன்
'ஓஹோ'வென்று வாழ்கிருன்!

'விதி'

இயக்க விதிகளை
உலகிற்கு உணர்த்திய
ஐசக் நியூட்டன்
இன்று இருந்தால்
புத்தம் புதியதோர்
அரசியல் விதியினைக்
கண்டுபிடித் திருப்பார் :
'பட்ஜெட் என்றால்
துண்டு விழும்!'

நடைமுறை வணிகம்

'இம்மைச் செய்தது
மறுமைக்கு ஆம்'எனும்
அறவிலை வணிகர்
அல்ல நாங்கள் —
முற்பகல் செய்யின்,
பிற்பகல் செய்யும்
நடைமுறை வணிகர்
நாங்கள் அறிவீர்!

பிள்ளைச் சிறு விண்ணப்பம்

வான் கலந்த

மாணிக்க வாசகருக்காக
நரியைப் பரியாக்கிய

இறைவா,

'மண்ணின் மைந்தர்'களாகிய

எங்களுக்காக

எங்கள்

அலுமினியப் பாத்திரத்தை

அட்சயப் பாத்திரமாக

மாற்றக் கூடாதா?

மரணம்

டிக்கெட் இல்லாத

பயணம் —

இதற்குக்

கட்டணத்துடன்

அபராதம் ரூ. 2

வசூலிக்கப்பட மாட்டாது.

உண்மைக்கு விலை

ஆணைப்பட்ட
அரிச்சந்திரனும்
உண்மையை
விலை பேசிடுவான்—
அரசியல்வாதியானல்.

சாதி இரண்டே

சாதி இரண்டொழிய
வேறில்லை உண்மை
முக்காலும் உண்மை
நம் சாதி
நம் சாதியல்லாத
பிற சாதி எனச்
சாதி இரண்டே,
யாரே மறுப்பார்?

'கல்விச் சுற்றுலா'

அன்று
சின்ன வயதில்
பள்ளியில் இருந்து
ஊருக்குப் போய்வந்த
மறுநாள் வகுப்பில்
கட்டுரை எழுதினேன் —
'கல்விச் சுற்றுலா'
என்னும் தலைப்பில்.

இன்று
நான் பல்கலைக்கழகக்
கடைசித் தேர்வினை
எழுதி முடித்ததுமே
அப்பா ஊர்ஊராகச்
சுற்றி வருகிறார் —
இதுவும் ஒரு
'கல்விச் சுற்றுலா'வே!

புதிய எச்சரிக்கை

இங்கே
புலித்தோல்
போர்த்திய
பசுக்கள்
உலவுகின்றன —
ஜாக்கிரதை!

கவிதைத் துணுக்குகள்

அரசியல்வாதி

வாய்ச்சொல் வீரர்

விமர்சகர்

முறையீட்டு அதிகாரி

ஆசிரியர்

அறுவைச் சிகிச்சை வல்லுநர்

கண்டக்டர்

சீட்டுக் கிழிக்கும் சீமான்

ஆராய்ச்சியாளர்

வெட்டி ஒட்டும் வித்தகர்

குழந்தை

படிக்காமல் கிழிக்கும் மேதை

பெண்

கண்ணீரின் பிரதிநிதி

மனைவி

அன்புத் தொல்லை

மனிதன்

பிறவி நடிகன்

இருட்டு

நிலவில்லாத

அமாவாசை வானம்

இருண்டு கிடந்தது—

வேலையில்லாத

பட்டதாரியின்

எதிர்காலம் போல்.

கடமையும் பலனும்

அன்று
பகவத் கீதையில்
கிருஷ்ண பகவான்
அருளிய
உபதேசம்—
இன்று
அவசர யுகத்தில்
அனுபவக் கல்வியால்
இப்படி அமைகிறது :
'பலனை எதிர்பார்த்து
கடமையைச் செய் ;
முடிந்தால்
கடமையைச் செய்யாமலே
பலனை அனுபவிக்கப் பார்!'

முதுமை

பிள்ளைப் பருவத்து
ஒத்திகை
நரையும் திரையும்
நடமிடும் கலையரங்கம்
கவலைகளின் சரக்கறை
பிணிகளின் சரணாலயம்
வாழ்க்கைக் கச்சேரியின்
மங்களப் பாட்டு.

வேண்டுதல்

தெருக் கோடியில்
நடை பாதையில்
மரத்து நிழலில்
குந்தி இருக்கும்
கல்லுப் பிள்ளையாரிடம்
குருட்டுப் பிச்சைக்காரன்
மனம் திறந்து
வேண்டிக் கொண்டான் —
'ஒளிமயமான' எதிர்காலம்
வரவேண்டும் என்று.

லயம்

அவன்
கண நேரத்து
சதைப் பசியினைத்
தீர்த்துக் கொள்ள
அவளை
அழைத்தான்.

அவள்
அந்த நேரத்து
வயிற்றுப் பசிக்கு
முற்றுப்புள்ளி வைக்க
அவனுக்கு
இணங்கினாள்.

இருவரும்
பஸ் ஸ்டாண்டில்
பாதை ஓரத்தில்
மங்கிய வெளிச்சத்தில்
தம்மை மறந்த லயந்தனில்
'வாழ்ந்து' கொண்டிருந்தார்கள்!

'இரக்கம்'

காலை எழுந்ததும்
இல்லாள் கொடுத்த
'படுக்கைக் காபி'யைப்
பருகிக் கொண்டே
பத்திரிகையைப் புரட்டினால் —
'அட, பாவமே!
ஈரானில் பூகம்பமாம்,
15000 பேர் சாவாம்,
என்ன கொடுமை இது?'

சின்னச் சின்ன இழை

மூன்றும் பிறை

அந்திப் பெண்
நீல வானத்தில்
கடித்துத் துப்பிய
நகம்.

வகிடு

தலை நகரின்
ஒற்றையடிப் பாதை.

கொட்டாவி

தூக்க வேந்தன்
வருவதை அறிவிக்கும்
வாயிற் காவலன்.

பதவி ஆசை

இந்திய நாட்டுத்
தூணிலும் இருப்பது
துரும்பிலும் இருப்பது ....

ஏரக வெளியீடுகள்

1. ஆய்வியல் அறிமுகம்
டாக்டர் தமிழண்ணல், டாக்டர் எம். எஸ். இலக்குமணன்

'ஆராய்ச்சிக்குரிய நெறிமுறைகளை வகுத்துக் கூறும் நூல். தமிழில் இத்துறையில் வருகின்ற முதல் நூல்—முழுமை பெற்ற நூல்—இதுவேயாகும்.'

இரண்டாம் பதிப்பு: செப்டெம்பர் 1979
விலை: ரூ. 25 பக்கம்: 290.

2. ஆய்வியல் வழிகாட்டி
டாக்டர் தமிழண்ணல், மா. சு. இலக்குமணன், இரா. மோகன்

தமிழ் முதுகலை, ஆய்வு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் சிறிய கையேடு; அரிய கைவிளக்கு.

முதற்பதிப்பு: நவம்பர் 1979 விலை: ரூ. 5 பக்கம்: 72

3. புனைகதைத் திறன்
டாக்டர் இரா. மோகன்

'நடுநிலையுடன் அறிவியல் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து இக்கால இலக்கிய ஆய்வை மேற்கொள்ள, இந்நூற் கட்டுரைகள் பலவும் வழிகாட்டியாய் அமையுமெனில் மிகையாகாது.'

முதற்பதிப்பு: பிப்ரவரி 1980 விலை: ரூ. 10
பக்கம்: viii + 206.

4. துணுக்குத் திரட்டு
டாக்டர் இரா. மோகன்

'ஒரு துணுக்காளன் நமக்காக அரும்பாடுபட்டுத் தேடித் தரும் செல்வம் இது. இத்தகையவற்றை ஓர் அறிவுக் கோவை என்றே குறிப்பிடலாம்.'

முதற்பதிப்பு: மார்ச்சு 1980 விலை: ரூ. 5
பக்கம்: x + 104.

5. உலோச்சனர்
க. முத்துச்சாமி, எம்.ஏ.

'இந்நூலின்கண் உலோச்சனர் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும், இலக்கிய ஆய்வும் பல்வேறு கோணங்களில் பகுத்தும் தொகுத்தும் தரப்பட்டுள்ளன.'

முதற்பதிப்பு: மார்ச்சு 1980 விலை: ரூ. 4
பக்கம்: iv + 86.